பிரஸார் பாரதி
அகில இந்தியவானொலி, சென்னை

17 06 2024 **MONDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மேற்குவங்கத்தில் நேரிட்ட ரயில் விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 12 லட்சம் ரூபாய் நிதியுதவியை மத்திய அரசு அறிவித்துள்ளது.
2. பால் உற்பத்தியில் தமிழகம் முன்னணியில் உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.
3. மணல் கடத்தலை தடுக்க திமுக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.
4. தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
5. பாரிஸ் ஒலிம்பிக் தகுதிச்சுற்று வில்வித்தை போட்டியில் இந்தியாவின் **Bhajan Kaur** தங்கப்பதக்கம் வென்றார்.

இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>

மேற்குவங்கத்தில் நேரிட்ட ரயில் விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 9-ஆக அதிகரித்துள்ளது.

**Agartala**-லிருந்து **Sealdah**-விற்கு சென்று கொண்டிருந்த, **Kanchanjunga** விரைவு ரயில், ஜல்பைகுரி அருகே சென்று கொண்டிருந்தபோது, அந்த ரயிலின் பின்புறம் சரக்கு ரயில் மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விபத்து குறித்து தகவல் அறிந்தவுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி, ரயில்வே அதிகாரிகளை தொடர்புகொண்டு முழுவிவரங்களை கேட்டறிந்தார்.

சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப்பணிகளை துரிதப்படுத்துமாறு ரயில்வே அமைச்சருக்கு தாம் அறிவுறுத்தியிருப்பதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் பிரதமரின் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ரயில்வே சார்பிலும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா இரண்டரை லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் நிதியுதவி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று இந்த விபத்து நடந்த பகுதியை ஆய்வு செய்தார்.

இதனைத்தொடர்ந்து இந்த விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களையும் சந்தித்த ரயில்வே அமைச்சர் ஆறுதல் தெரிவித்தார்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி உட்பட பலர் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

<<<<<<<>>>>>

பால் உற்பத்தியில் தமிழகம் முன்னணியில் உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

நாட்டின் ஒட்டுமொத்த பால் உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு, நான்கு புள்ளி ஐந்து ஏழு சதவீதமாக உள்ளது என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கடந்த மூன்றாண்டுகளில் இந்த துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தில் செயல்பட்டுவரும் 9 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொடக்க பால்

உற்பத்தியாளர்கள் சங்கத்தின் மூலம், நாளொன்றுக்கு 31 லட்சத்து 67 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பால் உற்பத்தியாளர்களுக்கு தாமதம் இல்லாமல் அவர்களுக்கான தொகை வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்படுவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்திலிருந்து மீன்பிடிக்க சென்றபோது, படகு சேதமடைந்ததன் காரணமாக, நீரில் மூழ்கி உயிரிழந்த மூன்று பேரின் குடுபத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த சம்பவம் தமக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தியிருப்பதாகவும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துக்கொள்வதாகவும் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>

மணல் கடத்தலை தடுப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளை திமுக அரசு மேற்கொள்ளவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், மணல் கடத்தலை தடுக்கும் வருவாய் மற்றும் காவல்துறையினர் தாக்குதலுக்கு உள்ளாவது தொடர்ந்து நடைபெறுவதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>

மேகதாது அணை பிரச்சினை குறித்து பேச்சு நடத்த வேண்டும் என்று மத்திய நீர்வளத்துறை இணையமைச்சர் திரு சோமண்ணா கருத்து தெரிவித்திருப்பது கண்டிக்கத்தக்கது என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராதாசு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த அணை பிரச்சினை தொடர்பாக பேச்சு நடத்த மத்திய அரசிடமிருந்து அழைப்பு வந்தால் அதை தமிழக அரசு ஏற்கக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<<>>>>>

தமிழக சட்டப்பேரவையில் ஆணவ படுகொலை தடுப்புச் சட்டத்தை இயற்ற மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு பாலகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

இன்று திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சாதி ஆணவ படுகொலைகள் அதிகம் நடக்கும் மாநிலமாக தமிழகம் உள்ளதாக குறிப்பிட்டார்.

இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது காவல்துறையினர் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு பாலகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>

புதிய குற்றவியல் சட்டங்கள் விரிவான ஆலோசனைகளுக்கு பிறகே கொண்டுவரப்பட்டுள்ளதாக மத்திய சட்ட அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் கூறியுள்ளார்.

கொல்கத்தாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்த புதிய சட்டங்கள் தொடர்பாக, 16 உயர்நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகளும், 22 சட்ட பல்கலைக்கழகங்களும், கருத்துக்களை தெரிவித்துள்ளதாக கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களை பொறுத்தவரை 142 பேர் இந்த சட்டம் தொடர்பாக கருத்துக்களை தெரிவித்ததாகவும், அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் 270 சட்டப்பேரவை உறுப்பினர்கள் மட்டுமே இந்த சட்டங்கள் தொடர்பாக கருத்துக்களை தெரிவித்ததாக கூறினார்.

இந்த புதிய குற்றவியல் சட்டங்கள் அடுத்த மாதம் ஒன்றாம் தேதிமுதல் செயல்பட்டிற்கு வருவதையும் சட்ட அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

<<<<<<<>>>>>

மதுரை – பெங்களூரு இடையே கரூர் வழியாக இயக்கப்படவுள்ள வந்தேபாரத் ரயிலுக்கான சோதனை ஓட்டம் இன்று நடைபெற்றது.

மதுரையில் காலை புறப்பட்ட இந்த ரயில், திருச்சி வழியாக எட்டரை மணியளவில் கரூர் வந்தடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - பாலகிருஷ்ணன் - 43 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 45 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தென்காசி மாவட்டம் செங்கோட்டையில் சுதந்திரப்போராட்ட வீரர் வாஞ்சிநாதனின் 113-ஆவது நினைவுதினத்தை முன்னிட்டு அன்னாரது திருவுருவச்சிலைக்கு ஆட்சியர் திரு கமல் கிஷோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

----------------

திருவாரூர் மாவட்டம் வெள்ளங்குளி அருகே இயங்கிவந்த பட்டாசு ஆலையில் வெடி விபத்தில் உயிரிழந்த சதீஷ்குமாரின் குடும்பத்தினருக்கு மூன்று லட்சம் ரூபாய் நிவாரண உதவியை மாநில அரசு அறிவித்துள்ளது.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் ஒலிம்பிக் தகுதிச்சுற்று வில்வித்தை போட்டியில் இந்தியாவின் **Bhajan Kaur** தங்கப்பதக்கம் வென்றார்.

துருக்கியின் **Antalya** –வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், ஈரானின் **Mobina Fallah** –ஐ வென்று இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

ஒலிம்பிக் வில்வித்தை போட்டியில் பங்கேற்கவும் **Bhajan Kaur** தகுதி பெற்றார்.

------------------

இத்தாலியில் நடைபெற்றுவரும் உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியாவின் **Ganemat Sekhon** இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

----------

பிரிக்ஸ் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா ஒரு தங்கம், மூன்று வெள்ளி, 9 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

ரஷ்யாவின் **Kazan**–ல் நடைபெற்று வரும் இப்போட்டியின், மகளிர் 48 கிலோ **Sanda** பிரிவில் அபர்ணா தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் 65 கிலோ எடைப்பிரிவில் **Nitika Bansal** –லும், 56 கிலோ எடைப்பிரிவில் **Sunil Mayanglambam**-மும், ஆடவர் 65 கிலோ எடைப்பிரிவில் **Surya Bhanu Pratap Singh** வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் 52 கிலோ எடைப்பிரிவில் **Anuj**-ம், மகளிர் 56 கிலோ எடைப்பிரிவில் **Jahnavi Mehra**-ம், ஆடவர் 75 கிலோ எடைப்பிரிவில் **Vikrant Baliyan** –ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் ஆயிரத்து 500 மீட்டர் ஓட்டப்பிரிவில் **Yoonus** –ம், ஆடவர் 200 மீட்டர் ஓட்டப்பிரிவில் **Animesh Kujur** –ம் ஆடவர் 800 மீட்டர் ஓட்டப்பிரிவில் **Somnath Chauhan** –ம், வெண்கலப்பதக்கம் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், மூன்று வெள்ளி, 10 வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் ஏழாவது இடத்தில் உள்ளது.

----------------

ஆசிய இளையோர் துடுப்பு படகு சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

தாய்லாந்தின் **Rayong** –ல் நடைபெற்ற இப்போடடியின் இரட்டையர் பிரிவில் சுதீர் குமார் - பிரின்ஸ் கோஸ்வாமி இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

**<<<<<<<END>>>>>>**